**C.C. No. 4 /2025**

**Deposition of P.W. 3**

**Dated : 11.02.2026**

**Name :** திரு.சிவகுமார்

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மாவட்ட வன அலுவலகத்திலிருந்து தகவல் கிடைத்தவுடன் யார்யாருடன் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் FRO ரவீந்திரன் வனவர் மணிகண்டன் ஆகியோர்களுடன் சென்றோம். சம்பவ இடத்திற்கு நான் செல்லும்போது சுமார் 4.30 இருககும். சம்பவ இடத்திலிருந்து சிவகாமிபுரம் பீட் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 8 கி.மீ. தொலைவு இருக்கும். சம்பவ இடத்திலிருநது பணக்குடி பீட் சுமார் 3 முதல் 4 கி.மீ. தொலைவு இருக்கும். சம்பவ இடத்திற்கு மற்ற அதிகாரிகள் சுமார் 4.30 மணிக்கு வந்துவிட்டார்கள். அன்றைய தினததில் வேட்டை தடுபபு காவலர் எந்த பகுதியில் பணியில் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. 2ம் எதிரியை கைது செய்த இடம் வனப்பகுதி இல்லை என்றால் சரிதான். குட்டிகுளம் பகுதியிலிருந்து காந்தி மேலத்தெரு சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் தெரியாது. குட்டிகுளம் பகுதியிலிருந்து ராஜிவ் வடக்குதெரு சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால்

தெரியாது. எதிரிகள் எந்த பகுதியில் வேட்டையாடினார்கள் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் உப்புஓடை பகுதியில் வேட்டையாடினார்கள். வேட்டையாடுவதற்கு கூர்மையான ஆயுதங்கள், வேல் ஆகியவற்றை பயன்படுத்தியதாக கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் கைது செய்தபோது கத்தி மட்டும் கைப்பற்றப்பட்டது. கழிவு பகுதியை எந்தபகுதியில் வீசி எறிந்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் கழிவு பொருட்கள் எதுவும் வீசவில்லை. ரத்தம் பட்ட மண் பகுதி இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தின் அருகே விவசாயம் நடைபெற்றதா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு வடக்கு பகுதியில் வீட்டுமனைகள் உள்ளது. முதல்விசாரணையில் உயிரினத்தின் தலையை கைப்பற்றியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சுமார் எத்தனை துண்டுகள் இருந்தது என்றால் எண்ணவில்லை. சுமார் 15 கிலோ இருக்கும். 15 கிலோ என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.(பின்னிட்டு சாட்சி அதன் எடை ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்தார் ). ஸ்தல மகசரிலும் எத்தனை கிலோ மாமிசம் என குறிப்பிடப்படவில்லை என்றால்

சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவி்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. வேட்டைதடுப்பு காவலர் ஜெகன் என்பவரது பொய்யான தகவலின் பேரில் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>2ம் எதிர்தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் எதிர்தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.